எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை என்னவென்பதை நான் தனிக் கவனம் செலுத்திப் பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர்.கே. நரசிம்மன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

பேருந்து வசதி

***115316—திரு. கே.ஆர்.கே. நரசிம்மன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தருமபுரியிலிருந்து சென்னைக்கு போச்சம்பள்ளி வழியாக இயக்கப்படும் பேருந்து வசதிகள் போச்சம்பள்ளி, சென்னை பயணிகள் பயன்படுத்திக்கொள்ள போதுமானவையாக உள்ளன. போச்சம்பள்ளியிலிருந்து சென்னைக்கு செல்லும் நேரடிப் பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்போது போச்சம்பள்ளி—சென்னை தடத்தில் புதிய பேருந்து இயக்குவது குறித்து பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர்.கே. நரசிம்மன்.*

திரு. கே.ஆர்.கே. நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி வட்டத் தலைநகரமாகும். இது தமிழகத்திலே அதிகமாக உற்பத்தியாகும் மா விளைச்சலின் வர்த்தக ஸ்தலமாகும். தமிழகத்திலே இயங்கி வரும் வாரச் சந்தைகளில் மிகப் பெரிய இரண்டாவது வாரச் சந்தை ஞாயிறுதோறும் நடைபெறுகிறது. மாண்புமிகு முத்தமிழறிஞர்*

2010 நவம்பர் 10]

தலைவர் முதல்வர் அவர்களால் நிதிநிலை அறிக்கையில் கிரானைட் தொழிற்சாலைக்கு 500 கோடி ரூபாய் ஒதுக்கித் தரப்பட்ட பகுதி இந்தப் பகுதி ஆகும். அதேசமயத்தில் சுற்றிலும் கிராமப் பகுதிகள் அதிகமாக உள்ளதால் போச்சம்பள்ளியிலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்கப்படுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் லிமிடெட் சார்பாக 11 பேருந்துகளும், சேலம் மண்டலம் சார்பாக 2 பேருந்துகளும், வேலூர் மண்டலம் சார்பாக 13 பேருந்துகளும், கிட்டத்தட்ட 26 பேருந்துகள்மூலம் 50 நடைகள் அந்த வழியாக இயக்கிக் கொண்டிருக்கிறோம். போச்சம்பள்ளியிலிருந்து 10 சதவிகிதம்தான் அடர்வு வருகிறது என்ற கணக்கிருக்கிற காரணத்தால் போச்சம்பள்ளியிலிருந்து நேரடியாக பேருந்து இயக்கக்கூடிய சாத்தியக்கூறு இதுவரை ஏற்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மீண்டும் அது ஆய்வு செய்யப்பட்டு, அங்கு அவசியம் தேவைப்படுமானால் உடனடியாக அந்தப் பேருந்தை இயக்க முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர்.கே. நரசிம்மன்.

திரு. கே.ஆர்.கே. நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா வட்டத் தலைநகரங்களிலிருந்தும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. போச்சம்பள்ளி பகுதியில் கிரானைட் தொழிற்சாலை, சிப்காட் போன்றவை இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து பேருந்து இயக்க முன்வருவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்கள்

பகுதியிலிருந்து சென்னைக்கோ மற்ற நகரங்களுக்கோ நேரடியாக பேருந்து இயக்கப்பட வேண்டுமென்று நினைப்பது அவர்கள் அளவிலே சரியாக இருக்கும். ஒரு புறநகர் பேருந்து இயக்கப்பட வேண்டுமென்றால், நாளொன்றுக்கு 9,000 ரூபாய் வசூலானால்தான் அது break-even, வரவு செலவுக்குச் சரியாக இருக்கும். நகரப் பேருந்து என்று எடுத்துக்கொண்டால், நாளொன்றுக்கு 6,000 ரூபாய் வசூலாக வேண்டும். ஆனால், இன்றைக்கு இருக்கிற நிலவரப்படி சராசரியாக ஒரு பேருந்து நாளொன்றுக்கு 2,000 ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. நகரப் பேருந்தாக இருந்தாலும், புறநகரப் பேருந்தாக இருந்தாலும், இன்றைக்கு 20,000 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அப்படியென்றால் நாளொன்றுக்கு கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் நஷ்டத்தில்தான் இந்தப் பேருந்துகளை மக்கள் பயன்பாட்டிற்காக இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னதுபோல, தனியார் பேருந்துகள் எங்கெங்கெல்லாம் கிராமங்களிலிருந்து நகரத்திற்கு, நீதிமன்ற உத்தரவுமூலமாக வந்துவிட்டார்களோ, அந்தப் பகுதிகளில் இருக்கின்ற கிராமங்களுக்கு விடவேண்டும் என்று உத்தரவிட்டுதான் இப்போது 2,000 புதிய வழித்தடங்களிலே பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதைக்காட்டிலும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் 'அந்தப் பகுதியில் தொழிற்சாலை அதிகமாக வர இருக்கிறது; எனவே, தேவை' என்று சொல்லியிருக்கிறார். நிச்சயம் அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும், விரைவில் அது தீர்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய செய்தித்தாள்களில் போக்குவரத்துத் துறை அமைச்சருடைய பிறந்த நாள் செய்தி வந்திருக்கின்றது. போக்குவரத்துத் துறை அமைச்சரிடமிருந்து பிறந்த நாள் செய்தியாக உயர்த்தப்பட்ட பேருந்துக் கட்டணத்தைக் குறைக்கின்ற வகையில் செய்திகள் வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 நவம்பர் 10]

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் தொடர்ந்து ஒரே செய்தியை, 4 ஆண்டுக் காலமாக, இதையே சொல்லிக் கொண்டிருக்கிறார். ஒரு செய்தியை மீண்டும் மீண்டும் சொன்னால் அது உண்மையாகிவிடுமென்று அவர் கருதுகிறார். நான் அவருக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, சாதாரணக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு 28 காசு. அதையே எக்ஸ்பிரஸ் கட்டணம் என்று சொன்னால் ஒரு கிலோ மீட்டருக்கு 32 காசு. அதையே விரைவுப் போக்குவரத்துக் கட்டணம் என்று சொன்னால் 52 காசு. அதையே அல்ட்ரா டீலக்ஸ் என்று சொன்னால் ஒரு கிலோ மீட்டருக்கு 80 காசு. A.C. Bus என்றால் 1 ரூபாய். இதுதான் இன்றைக்கு இருக்கிற பேருந்துக் கட்டணம். சென்னையைப் பொறுத்தளவு, தாழ்தள சொகுசுப் பேருந்து என்று வருகிறபோது மத்திய அரசு 120 கோடி ரூபாய் மானியம் தந்து அந்தப் பேருந்துகள் இயக்கப்படுகின்றபோது, ஒரு சாதாரணப் பேருந்தினுடைய விலை 10 இலட்சம் ரூபாய் என்று சொன்னால், தாழ்தள பேருந்தினுடைய விலை ரூ.22 இலட்சம். அவர்களே இந்தப் பேருந்தை, இந்த அளவிலே ஓட்ட வேண்டுமென்று அதற்குச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, சென்னையைப் பொறுத்தவரையிலே தாழ்தளப் பேருந்துக்கு மட்டும் ஒன்றுக்கு ஒன்றரை என்ற கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கலர் கலராக பஸ்சை விட்டு காசை ஏற்றிவிட்டார்கள் என்று இங்கே சட்டமன்றத்திலே அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள். உங்கள் ஆட்சிக் காலத்தில் சென்னையில் மட்டும் ஓட்டப்பட்ட பேருந்துகள் எண்ணிக்கை 1,800. இன்றைக்கு 3,000 பேருந்துகள் இயங்கிவருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) 3,000 பேருந்துகளிலே ஏற்கெனவே சாதாரணக் கட்டணத்தில் எவ்வளவு பேருந்துகள் ஓட்டப்பட்டனவோ, அவற்றில் ஒன்றுகூட குறையாமல், அந்தப் பேருந்துகள் அப்படியே இயங்கிக்கொண்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவைப்பட்டால் முழு விவரங்களையும் அவருக்கு அளிக்க நான் தயாராக இருக்கிறேன். நேற்று முன்தினம்கூட 'தினமணி' பத்திரிகையிலே, அரசுப் பேருந்துகளிலே கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னைக் கூப்பிட்டு 'என்ன நடந்தது' என்று

கேட்டபோது, விழாக் காலங்களில் பேருந்துகளில் ஒரு டிக்கெட்டினை முன்பதிவு செய்கின்றபோது ரூ.5 முன்பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறதே தவிர, ஒரு பைசாகூட கூடுதலாகக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை என்று தெரிவித்தேன்.

இருந்தும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பக்கத்திலே அமர்ந்திருக்கின்ற முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் விவரத்தினை அவர்களிடத்தில் சொன்னால் நன்றாக இருக்கும். நீங்கள் சிரித்துக்கொண்டு அமைதியாக இருக்கிறீர்கள். (குறுக்கீடு) (சிரிப்பு) நீங்கள் சொல்லவே மாட்டேன் என்கிறீர்கள். (சிரிப்பு) (குறுக்கீடு) எப்படி என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் என்ன சொல்கிறார் என்பதை நான் கூர்ந்து கவனிக்கின்றபோது, அன்றாடம் எவ்வளவு பேர் பயணம் செய்கிறார்கள், அன்றைய ஆட்சிக்காலத்தில் எவ்வளவு வருவாய் வந்தது; இன்று எவ்வளவு பேர் பயணம் செய்கிறார்கள்? இன்று வருவாய் இரண்டு மடங்கு கூடுதலாக வருகின்றபோது மறைமுகமாகக் கட்டணம் ஏற்றப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு, அன்றைக்கு தமிழ்நாடு அரசினுடைய சார்பாக இயக்கப்பட்ட பேருந்துகளினுடைய மொத்த எண்ணிக்கை 18,000 என்று சொல்லப்பட்டது. ஆனால் இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை 16,000. அன்றைக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக தமிழ்நாடு முழுவதும் இயக்கப்பட்ட தூரம் 64 இலட்சம் கிலோ மீட்டர்கள். இன்றைக்கு சராசரியாக நாள் ஒன்றுக்கு இயக்கப்படுகின்ற தூரம் 95 இலட்சம் கிலோ மீட்டர்கள். 2006 ஆம் ஆண்டுக்கு முன்பு நாள் ஒன்றுக்கு பயணம் செய்த பயணிகள் 1 கோடியே, 64 இலட்சம் பேர். இன்றைக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக 2 கோடியே 5 இலட்சம் பேர்

2010 நவம்பர் 10]

பயணிக்கிறார்கள். எனவே, எங்களுக்குக் கூடுதலாக எவ்வளவு வரவு என்பது அல்ல; எவ்வளவு தூரம் பயணிகள் கூட வருகிறார்களோ அந்த அளவிற்குப் பேருந்துகளும் கூடுதலாக வந்துகொண்டிருக்கின்றன. எனவே, செலவும் கூடுதலாக இருக்கிறது. உங்கள் காலத்தில் டீசல் விலை 18 ரூபாய். இன்றைக்கு 36 ரூபாய். எனவே, அனைத்தும் தெரிந்துகொண்டு, தெரியாததுபோல் அதாவது தூங்குபவர்களை எழுப்பிவிடலாம். தூங்குபவர்கள்போல் நடிப்பவர்களை எப்படி எழுப்ப முடியும்? (சிரிப்பு) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரும்பத் திரும்ப நீங்களே பேசிக்கொண்டிருந்தீர்கள் என்றால் எப்படி? (குறுக்கீடு) இன்னும் கேள்விகள் இருக்கின்றனவே. (குறுக்கீடு) அதுதான் கட்டணத்தை ஏற்றவில்லை என்று சொல்விட்டார்களே! (குறுக்கீடு) பேருந்துக் கட்டணத்தை உயர்த்தவில்லை என்று சொல்லிவிட்டார்கள் அல்லவா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்பது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஓடிய வழித் தடங்களில் என்ன கட்டணம் வசூல் செய்யப்பட்டது; அதே வழித்தடங்களில் நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர் என்ன கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. (குறுக்கீடு) அதாவது, நான் பேசி முடித்துவிடுகிறேன். அந்தப் பேருந்துகளை நிறம் மாற்றி, புதிய கட்டணம், உயர்வானக் கட்டணம் வசூலித்துக்கொண்டிருக்கிறீர்கள். அதற்குத்தான் நான் விளக்கம் கேட்டேன். அதை நீங்கள் ஒரு வெள்ளை அறிக்கையாக இந்த சபையில் வைத்தால் அனைவருக்கும் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கலரில் வேண்டுமானாலும் அறிக்கை வைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதில் ஒன்றும் மாற்றம் இல்லை. உங்கள் 5 ஆண்டுக் கால ஆட்சியில் வாங்கப்பட்ட புதுப் பேருந்துகள் 5,600. இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதியதாக வாங்கியிருக்கின்ற பேருந்துகள்

15,000. கடந்த 4½ வருடங்களில் இந்தப் புதிய பேருந்துகளை வாங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் நீங்கள் வாங்கியதில் கலரை அடிக்கவேண்டும் என்று எங்களுக்கு அபிப்பிராயம் இல்லை. அதனால் நாங்கள் எங்களுக்குப் பிடித்த கலரை அடிக்கிறோம். (குறுக்கீடு) கலர் அடிக்கவில்லை. அது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வெள்ளை அறிக்கை என்று கேட்டீர்கள். என்ன கலரில் வேண்டுமானாலும் நாங்கள் கொடுக்கிறோம் என்கிறார். இதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: 5 வருடங்களாக எவ்வளவு நஷ்டம் வந்த போதும் இன்னும் ஒரு முறைகூட கட்டணத்தை ஏற்றவில்லை. ஆனால் உங்கள் ஆட்சியில் 2 முறை கட்டணத்தை ஏற்றினீர்கள். 6 காசு என்றும் மீண்டும் 8 காசு என்றும் கட்டணத்தை உயர்த்தினீர்கள். கட்டணத்தை உயர்த்தினீர்கள் நீங்கள். கட்டணத்தை உயர்த்திய நீங்கள், கட்டணத்தை உயர்த்திவிட்டோம் என்று எங்களைச் சொல்வது எந்தவகையிலும் நியாயம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்விதமாக Double decker பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாடி பஸ்கள் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டன. அதில் பயணிகள் மேலே, கீழே என்று ஏறி இறங்குவதற்கு சிரமங்கள் இருக்கின்ற காரணத்தினால்தான் அதற்குப்பதில் தொடர் பேருந்துகள்—vestibule buses இப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனால் தொடர் பேருந்துகள்—vestibule buses வருவதனால் மாடி பஸ் என்று சொல்லப்படுகின்ற Double decker பேருந்துகள் இப்போது தேவையில்லை என்று கருதி அவை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

2010 நவம்பர் 10]

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை ஐந்தாண்டுக் காலமாக நாங்கள் நன்கு புரிந்து வைத்திருக்கின்றோம். "நடக்கும் என்பார் நடக்காது, நடக்காது என்பார் நடந்துவிடும்" என்பதைப்போல, அவர் கட்டணம் உயரவில்லை என்று இங்கு சொன்னால், வெளியில் பஸ் கட்டணம் உயர்ந்திருக்கும். எதிர்மறையான பொருள்தான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொல்வது. இன்றைக்குத்தான் அவருடைய பிறந்த நாள் என்று நான் நினைத்தேன். நல்லவேளை நேற்றைக்கே கொண்டாடிவிட்டார் என்று புரிந்துகொண்டேன். ஆகவே, ஏற்கெனவே ஒரு வழித்தடத்தில் 4 விதமான பேருந்துகளை விட்டு, 4 விதமான கட்டணங்கள் வசூலிப்பது இன்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. திண்டுக்கல்லில் இருந்து பழனிக்கு கடந்த காலத்தில் 17 ரூபாய் இருந்தது. ஆனால், இப்பொழுது 24 ரூபாய். எனவே பஸ் கட்டணம் உயர்ந்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பஸ் கட்டணம் உயரவில்லை, உயரவில்லை என்று சொல்வது, அரசினுடைய மரபுகளுக்குப் பொருந்தாததாக இருக்கிறது. ஆகவே, மீண்டும் அதனைப் பரிசீலித்து, கட்டண உயர்வை, அதாவது அவருடைய பொருளில் சொல்லவேண்டுமென்றால், உயர்த்தாத அந்தக் கட்டணத்தை, மீண்டும் குறைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை இங்கே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்வி பாலபாரதி அவர்களுக்கு ஆரம்பத்தில் நாங்கள் சொல்வதெல்லாம் சரியாக இருந்தது. இப்பொழுது இருக்கிற இடம் மாறி இருக்கின்ற காரணத்தால், நாங்கள் சொல்வதெல்லாம் மாறி, மாறி இருக்கிறது என்று கருதுகிறேன். ஒரே வழித்தடத்தில்

[2010 நவம்பர் 10

பல்வேறுவிதமான பேருந்துகள் ஓடுவது என்பது தவறல்ல. சாதாரணக் கட்டணப் பேருந்துகள் ஓடுகின்றன; அங்கே எக்ஸ்பிரஸ் கட்டணப் பேருந்துகளும் ஓடுகின்றன; அங்கே Ultra Deluxe பேருந்துகளும் ஓடுகின்றன. அங்கே A.C. பஸ்ஸும் ஓடுகின்றன; மக்கள் எதை விரும்புகிறார்களோ அதிலே ஏறிக்கொள்கிறார்கள். எனவே, ஒரே வழித்தடத்தில் ஒரே இரகமான பேருந்துகளை ஓட்டவேண்டுமென்பது இயலாது. உதாரணத்திற்கு, தாம்பரத்திலிருந்து எடுத்துக்கொண்டால், உயர் நீதிமன்றம் வரை பல வகையான பேருந்துகள் வருகின்றன. உயர் நீதிமன்றத்தில் பணியாற்றுகின்றவர்கள்கூட, சாதாரக் கட்டணப் பேருந்துகள் இருக்கின்றபோது, A.C. பஸ்ஸில் வரப் பிரியப்படுகின்றார்கள். விரைவாக அவர்கள் வந்து சேருவதற்காக அதிலே பயணிக்கிறார்கள். இதுபோன்ற பல பயணிகளைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று பல வகையான பேருந்துகளை ஓட்டிக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு செயல்படுத்தி வருகின்ற மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ் திட்டத்தினால், கிராமப்புற மாணவர்கள் ஏராளமானோர் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நாடறிந்த நல்ல செய்தி. கிராமப்புற மாணவர்கள் பள்ளிக்கு வருகின்ற நேரத்தில், கூட்ட நெரிசல் காரணமாக பல மாணவர்களால் பள்ளிக்கே வர முடியாத சூழல் இருக்கிறது. எனவே, மாணவர்கள் பள்ளிக்கு வருகின்ற நேரத்திலும், பள்ளியிலிருந்து திரும்பிச் செல்கின்ற நேரத்தில் மட்டும் கூடுதல் பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, பரிட்சார்த்தமான முறையில் சென்னை மாநகரில் எந்தெந்த சாலைகளில் பள்ளிகள் அதிகமாக இருக்கின்றன; அங்கே எவ்வளவு

2010 நவம்பர் 10]

மாணவர்கள் பயணிக்கிறார்கள்; அந்த மாணவர்களின் இருப்பிடம் எங்கே இருக்கிறது என்பதையெல்லாம் கண்டறிந்து, முதலில் 50 பேருந்துகள் மாணவர்களுக்காக இப்பொழுது சென்னை மாநகரத்திலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்கிடையில் நமது துறையின் சார்பாக அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியப் பெருமக்களிடம், தமிழ்நாடு முழுவதும் ஒரு கணக்கெடுப்பு நடத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. குறிப்பாக எந்தெந்தப் பகுதிகளுக்கு, எந்தெந்த நேரத்தில், மாணவர்கள் தங்குதடையின்றி பள்ளிக்குச் செல்வதற்காகப் பேருந்துகளை விடவேண்டுமென்று அவர்கள் கணக்கெடுப்பு எடுத்துத் தந்த பிறகு, மாணவர்களுக்காக சென்னையில் இப்பொழுது எப்படி செய்யப்பட்டிருக்கிறதோ, அதேபோன்று பல மாவட்டங்களிலும் அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகள் இந்தத் துறையின் சார்பாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

சிகிச்சைப் பிரிவுகள்

***57060—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதயம், நரம்பியல், சிறுநீரக சிகிச்சைப் பிரிவுகளைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதயம், நரம்பியல், சிறுநீரக சிகிச்சைப் பிரிவுகள் நிதி ஆதார அடிப்படையில் உரிய தருணத்தில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.